4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 170/2020 நாள்: 06.10.2025 வா.சா.1 – பாஸ்கரன்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -

நான் பாகபிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி எனது உடன்பிறந்த சகோதரி ஆகும். நான் B.Sc பட்டப்படிப்பும், சுகர் டெக்னாலஜி சம்பந்தமாக சர்டிபிக்கேட் கோர்சும் படித்துள்ளேன். 1989 ல் பட்டப்படிப்பு படித்தேன். நான் B.Sc பட்டப்படிப்பை பழனியிலும், சுகர் டெக்னாலஜி படிப்பை உத்திரபிரதேச மாநிலம் கான்பூரிலும் படித்தேன். நான் B.Sc பட்டப்படிப்பை படித்த பிறகு கோத்தாரி சுகர் பேக்டரியில் லால்குடியில் 1989 நவம்பரில் பணிக்கு சேர்ந்தேன். எனக்கு 1997 ல் முதல் திருமணமும், 2005 ல் இரண்டாவது திருமணம் நடைபெற்றது. முதல் மனைவி இறந்தததால் இரண்டாவது திருமணம் நடந்தது. எனக்கு வேலை கிடைத்த பிறகு நான் லால்குடியில் தான் தங்கியிருந்தேன் என்றால் சரிதான். நான் தற்போது ஜெம் சுகர்ஸ் பேக்டரியில் கர்நாடக மாநிலத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் என்னுடைய வாழ்நாளில் 10 சுகர் கம்பெனிகளில் 5 மாநிலங்களில் வேலை பார்த்துள்ளேன். நான் கோத்தாரி கம்பெனி சுகர் பேக்டரியில் மட்டும் தமிழ்நாட்டில் வேலைபார்த்தேன் என்றால் சரியல்ல. தரணி சுகர் கம்பெனியிலும் தமிழ்நாட்டில் வேலை பார்த்தேன். மேற்படி தரணி சுகர் நிறுவனம் தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூரில் உள்ளது. கோத்தாரி 2வது யூனிட் சுகர் பேக்டரி அரியலுர் மாவட்டம், சாத்தமங்கலம் என்ற கிராமத்தில் உள்ளது, அதிலும் வேலை பார்த்தேன். நான் திருப்பூர் மற்றும் கோவை மாவட்டத்தில் உள்ள சுகர் கம்பெனிகளில் வேலை பார்க்கவில்லை என்றால் சரிதான். 1989 லிருந்து என்னுடைய பணி நிமிர்த்தமாக வெளி மாவட்டங்களிலும், வெளி மாநிலங்களிலும் தற்போது வரை பணியாற்றி

வருகிறேன் என்றால் சரிதான். 07.03.1984 ல் ஏற்படுத்தப்பட்ட பாகபிரிவினை பத்திரத்தின் அசல் ஆவணம் எங்குள்ளது என்ற விவரத்தை என்னுடைய வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் மேற்படி ஆவணம் சிண்டிகேட் வங்கியில் அடமானம் வைக்கும் போது என் தந்தையால் மேற்படி வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனது தகப்பனார் இறப்பதற்கு முன்பாக என் தாயார் 01.05.2013 ல் காலமாகிவிட்டார். எனது தகப்பனாரின் இளைய சகோதரர் பெயர் ஜெயபிரகாசம் ஆகும். 07.03.1984 ல் பாகபிரிவினை ஏற்படும் போது எனக்கு 17 வயது இருக்கும், எனது சகோதரிக்கு 15 வயது இருக்கும். தாவா சொத்து சம்பந்தப்பட்ட கணினி சிட்டா வா.சா.ஆ.4 ல் எனது சகோதரி பெயர் உள்ளது என்றால் சரிதான், அதில் உள்ள Sridhar என்பவர் எனது சித்தப்பா மகன். எனது சகோதரிக்கு 1992 ல் திருமணம் நடந்தது. எனது சகோதரியின் கணவர் ஊர் கணபதிபாளையம் என்றால் சரிதான். கணபதிபாளையத்திற்கும் எனது சொந்த ஊரான வி.வல்லக்குண்டாபுரத்திற்கும் இடையே 15 கிலோ மீட்டர் தூரம் இருக்கும்.

மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.